தமிழ்நாடு அரசு

**குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் துறை**

**தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் அலுவலகம், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களின் பத்திரிக்கை செய்தி**

2007-2008 மற்றும் 2008-2009ம் ஆண்டுகளுக்கான குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான சிறப்பு விருதுகள், மாநில மற்றும் மாவட்ட விருதுகள் வழங்கவேண்டி

தமிழக அரசு சிறந்த தொழில் முனைவோருக்கான மாநில மற்றும் மாவட்ட அளவிலான விருதுகளை ஆண்டு தோரும் வழங்கி வருகிறது. அதன்படி கீழ்காணும் மாநில / மாவட்ட விருதுகளுக்கு குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களிடமிருந்து உரிய படிவத்தில் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| வ. எண். | விருது | பரிசு |
|---|---|---|
| 1 | புதிய அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் மாநில அளவிலான சிறந்த தொழில் முனைவோர் | ரூ.50,000/- பண முடிப்பு மற்றும் நினைவுப் பரிசு |
| 2 | மாநில அளவிலான சிறந்த பெண் தொழில் முனைவோர் | ரூ.50,000/- பண முடிப்பு மற்றும் நினைவுப் பரிசு |
| 3 | மாநில அளவிலான சிறந்த தொழில் முனைவோர் | ரூ.50,000/- பண முடிப்பு மற்றும் நினைவுப் பரிசு |
| 4 | மாநில அளவிலான சிறந்த தரம் மற்றும் ஏற்றுமதிக்கான விருது. | ரூ.50,000/- பண முடிப்பு மற்றும் நினைவுப் பரிசு |
| 5 | மாவட்ட அளவிலான சிறந்த தொழில் முனைவோர் (ஒவ்வொரு மாவட்டத்திற்கும்) | நினைவுப் பரிசு |

**மேற்கண்ட விருதுகளுக்காக தகுதிகள் பின்வருமாறு :**

2007-2008ம் ஆண்டிற்கான விருதுகளுக்கு விண்ணப்பிக்கும் நிறுவனங்கள் 01.01.2000ற்கு பின் உற்பத்தி தொடங்கப்பட்டு தொழில் வணிகத் துறையின் மூலம் நிரந்தரப்பதிவுச்சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும், தவிர தொடர்ச்சியாக 2003-2004, 2004-2005, 2005-2006, 2006-2007 ஆகிய நான்கு ஆண்டுகள் செயல்பட்டிருக்க வேண்டும் என்று அறிவிக்கப்படுகிறது.

2008-2009 ம் ஆண்டிற்கான விருதுகளுக்கு விண்ணப்பிக்கும் நிறுவனங்கள் 01.01.2001ற்கு பின் உற்பத்தி தொடங்கப்பட்டு தொழில் வணிகத் துறையின் மூலம் நிரந்தரப்பதிவுச்சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும், தவிர தொடர்ச்சியாக 2004-2005, 2005-2006, 2006-2007 2007-2008 ஆகிய நான்கு ஆண்டுகள் செயல்பட்டிருக்க வேண்டும் என்று அறிவிக்கப்படுகிறது. மேற்படி விருதுகளுக்கான விண்ணப்பங்கள் மற்றும் தகுதிகளுக்கு மண்டல இணை இயக்குநர் தொழில் வணிகத்துறை அலுவலகம், கிண்டி, சென்னை-32 லும் மற்றும் அனைத்து மாவட்ட பொது மேலாளர்கள், மாவட்டத் தொழில் மையங்களிலும் கிடைக்கும்.

மேற்கண்ட அலுவலகங்களுக்கு விண்ணப்பம் வந்து சேரவேண்டிய நாள் நீட்டிப்புச் செய்யப்பட்ட கடைசி தேதி **26.02.2010.**

ஒம்/- கோ.சுந்தரமூர்த்தி
தொழில் ஆணையர் மற்றும்
தொழில் வணிக இயக்குநர்

ஆணைப்படி

4.2.10

தொழில் ஆணையர் மற்றும்
தொழில் வணிக இயக்குநருக்காக